DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

# உதயன் UTHAYAN

www.canadauthayan.ca

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community Realty Inc., Brokerage

RAMU SIVAPATHASUNDARAM, Realtor
Commercial Industrial Investments
Dir: 416-732-2507
Office: 905-2019977
www.realtorramu.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்.


MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1256 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 1, 2020

- **கோடிதான 'கோரோனா'வின் பாதிப்பிற்குள்ளாகி இறப்போரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது..**
- **உலகெங்கும் இறந்தவர்களின் எண்ணிக்கை 239,040 ஆக உயர்ந்துள்ளது**
- **அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை அச்சம் தருகின்றது. மொத்த இறப்பு: 66,137**
- **நேற்றுவரை கொரோனா பலிகொண்ட உலக மக்களின் எண்ணிக்கை இவை தான்:**



கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை மாலை வரை பலிகொண்ட உலக மக்களின் எண்ணிக்கை கீழே காணப்படுகின்றன. உலகெங்கிலுமான மொத்த இறப்புக்கள்: 239,040. சில நாடுகளில் கோரோனா இறப்புக்கள் பின்வருமாறு அமைகின்றன:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமெரிக்கா: 66,137 | இத்தாலி: 28185 | கனடா: 3329 | இங்கிலாந்து: 27510 | ஸ்பெயின்: 24801 | ஜேர்மனி: 6810 |
| சீனா: 4634 | பிரான்ஸ்: 24600 | ஈரான்: 5913 | இந்தியா: 1210 | இலங்கை: 8 | பெல்ஜியம்: 7612 |

# கனேடிய படையினர் எப்போதும் ஆபத்தான பணிகளில் ஈடுபடுவதால் தான், எஞ்சிய நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்கின்றோம்



### கனடிய படை வீரர்களின் ஹெலிகெப்டர் விபத்து குறித்து பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூரோ..

மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் பாதுகாப்பையும் உறுதித்தன்மையையும் மேம்படுத்தும் Operation Reassurance நடவடிக்கையில் கனடா அதன் மிகச் சிறந்த பங்களிப்பை வழங்குகிறது. ஐரோப்பாவில் நேட்டோவின் கூட்டுப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் கனேடியப் படையினர் 915 பேர் வரை ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டமாக இருந்தாலும், கனடாவின் பங்காளிகளுக்கும் நேச நாடுகளுக்கும் ஆதரவளிப்பதாக இருந்தாலும், கனேடிய ஆயுதப் படையினர் அவர்கள் எப்போதும் செய்வதைப் போன்று ஆபத்தை நோக்கிய பணிகளுக்குச் செல்வதால் எஞ்சிய நாம் அனைவரும் இங்கு பாதுகாப்பாக இருப்பதாகப் பிரதம மந்திரி கனேடியர்களுக்கு நினைவுபடுத்தினார். நேற்று காலை ஒட்டாவா நகரில் ஊடகங்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே, பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "உள்நாட்டில் கோவிட்-19 நெருக்கடிக்கு எதிரான நடவடிக்கையாகக் கனேடிய ஆயுதப் படைகளின் 500 க்கும் அதிகமான உறுப்பினர்கள் குபெக்கின் மொன்றியோலிலும், சுற்றுப் பகுதிகளிலும் உள்ள 13 நீண்டகால பராமரிப்பு நிலையங்களுக்கு விரைவில் அனுப்பப்படுவார்கள். கனேடிய ஆயுதப் படைகளின் அணிகள் இந்த வாரத்தின் முற்பகுதியில் ஒன்றாரியோவில் உள்ள ஐந்து நீண்டகால பராமரிப்பு நிலையங்களில் உதவி புரிவதற்கு அனுப்பப்பட்டன.

உள்நாடாக இருந்தாலும், வெளிநாடாக இருந்தாலும் கனேடிய ஆயுதப் படைகளில் உள்ள பெண்களும் ஆண்களும் கனேடியர்களின் விழுமியங்களையும், வீரத்தையும் உறுதியாக வெளிப்படுத்திக் கனடாவின் நோக்கங்களைச் செயற்படுத்துகிறார்கள். கனேடியர்கள் அவர்களுக்கு ஆதரவாக இருப்பதுடன், இழந்துவிட்ட தோழர்களைக் குடும்பத்தினருக்கும், நாட்டிற்குமாக மீட்கலாமென்ற அவர்களது நம்பிக்கையையும் பகிர்ந்து கொள்கிறார்கள்" என்றார் (மேற்படி விபத்து தொடர்பான விபரமான செய்தி பின்பக்கத்தில்)

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
- Family sponsorship;
- Super visa for parents and grandparents including health insurence;
- Citizenship;
- Permanent resident card renewal;
- Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600
info@allinoneservices.ca, www.allinoneservices.ca

At Markham & Sheppard)
DR. SABESAN DENTAL OFFICE
அனைத்து பல் வைத்திய சேவைகளுக்கும்
Dr.சபேசன் தங்கத்துரை
Dental Surgeon
Tel: 416-666-7770
1585 Markham Road, Unit 105
Scarborough, ON M1B 2W1
www.drsabesan.com
dental1585@gmail.com

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
Broker of Record, B.A. (Hons)
647-267-7482
RE/MAX REALTRON AD TEAM

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
உடனடியாக உங்கள் கைகளில் குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் நகைக்குப் பாதுகாப்பு அளிக்கும் நட்பான சேவைக்கு மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது தாமோர் அடைவு மாளிகையை நாடுங்கள்
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# மருத்துவ அவசரகால ஏற்பாடு


MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS

## Markham McNicoll Urgent Care Centre (MMUCC)

* வழமை போல எல்லா நாட்களும் திறந்திருக்கும்
* நீங்கள் வருவதற்கு முன் 416-609-3333 (எமது கிளினிக் தொலைபேசி) எண்ணில் அழைத்துப் பேசிய பின்னரே வரவேண்டும்.
* சிலரின் சிகிச்சை தொலைபேசி ஊடாகவே நிறைவேற்றப்படும். அவர்கள் நேரில் வரவேண்டியதில்லை.
* "கொரணா" அறிகுறியுள்ளோர் தயவு செய்து "Telehealth Ontario" (டெலிஹெல்த் ஒன்றாரியோ) ஐ 1-866-797-0000 என்ற எண்ணில் அழைக்கவும்.
* எமது கிளினிக்கில் "கொரணா" வைரசை சோதிக்கவோ, சிகிச்சையளிக்கவோ வசதிகள் இல்லை.

## Markham McNicoll Family Care Clinic (MMFCC)

* வழமை போல ஞாயிறு & விடுமுறைதவிர்ந்த எல்லா நாட்களும் திறந்திருக்கும்
* நீங்கள் வருவதற்கு முன் 416-292-6666 (எமது கிளினிக் தொலைபேசி) எண்ணில் அழைத்துப் பேசிய பின்னரே வரவேண்டும்.
* சிலரின் சிகிச்சை தொலைபேசி ஊடாகவே நிறைவேற்றப்படும். அவர்கள் நேரில் வரவேண்டியதில்லை.
* Dr. Nusrat Khan புதிய நோயாளர்களை ஏற்றுக் கொள்கிறார்.
* "கொரணா" அறிகுறியுள்ளோர் தயவு செய்து "Telehealth Ontario" (டெலிஹெல்த் ஒன்றாரியோ) ஐ 1-866-797-0000 என்ற எண்ணில் அழைக்கவும்.
* எமது கிளினிக்கில் "கொரணா" வைரசை சோதிக்கவோ, சிகிச்சையளிக்கவோ வசதிகள் இல்லை.

2901 Markham Road, Scarborough, ON M1X 0B6 | www.medcentrehealth.com

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

416.298.FOOT (3668)

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.canadauthayan.ca

UTHAYAN உதயன் கதிரோட்டம்

# தங்கள் உடல் உழைப்பினால் இந்த உலகத்தையே இயங்கச் செய்கின்ற விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்குரிய நாள் இன்று...

இன்று மே மாதம் 1ம் திகதி. இந்த நாளை நினைக்கும் போதெல்லாம் எமது கண்களுக்கு முன்னாபாக முதலில் தெரிவது சிவப்பு நிறக்கொடிகளும், அவற்றைக் கைகளில் பிடித்த வண்ணம் அணியணியாக நடந்து செல்லும் விவசாயிகளும் தொழிலாளர்களும் தான்..

தொழிலாளர்களின் விடிவிற்காகவும் அவர்களுக்கு எதிரான முதலாளித்துவத்தின் சுரண்டலையும் அடக்கு முறைகளையும்

எதிர்த்து குரல் கொடுத்தும், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வண்ணம் சித்தாதங்களையும், போராடுவதற்காக காரணங்களையும் உள்ளடக்கிய அறிவுபூர்வமான கருத்துக்ளையும் உருவாக்கி அவர்களின் மேம்பாட்டுக்காக உழைத்த முற்போக்கு கொள்கைகளைக் கொண்டு இயங்கும் கட்சிகளின் அல்லது இயக்கங்களின் கொடியே சிவப்பு நிறமுடையதாகும்.

ஆனால் தற்காலத்தில் இந்த மே தினம் அதன் முழுமையான அர்த்தத்துடன் தான் கொண்டாப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றபோது, இப்போதெல்லாம் இந்த "மே தினம்" அவசியமா என்ற கேள்வியும் எழுகின்றதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

இலங்கையை எடுத்துக் கொண்டால் அங்கே பச்சைக் கட்சிகள் நீலக் கட்சிகள் மற்றும் பல நிறங்களைக் கொண்ட கட்சிகள் எல்லாம் மேதினத்தைக் கொண்டாடுகின்றன. இன்னும் வியப்புக்குரிய விடயங்கள் எவையென்றால், இலங்கையிலும் இந்தியாவிலும் நாம் நேரடியாகக் காண்பது, தொழிலாளர்களின் பிள்ளைகளையும் விவசாயிகளின் பிள்ளைகளையும் இராணுவம் மற்றும் காவல்துறை ஆகிய பணிகளுக்கு அமர்த்தி, அவர்கள் மூலமாக ஆட்சியில் இருப்பவர்களுக்கு எதிராக குரல் கொடுப்பதையே நசுக்கும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள், மே தினத்தன்று நன்றாக தூங்கி எழுந்து, கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான உல்லாச வாகனங்களில் வந்து மேடையில் நான்கு புறமும் காற்றாடிகள் சுழன்று அவர்களுக்கு குளிரூட்ட, "தொழிலாளர்கள் வாழ்க!" என்று உரத்துக் கூச்சலிடுகின்றார்கள்.

மேடைகளுக்கு கீழே தொழிலாளர்களின் பிள்ளைகளான படையினரும் காவல்துறையினரும் ஆட்சியாளர்களுக்கு எவ்வித பாதிப்பும் வந்து விடக்கூடாது என்பதற்காக காவல் புரிவார்கள்.

இவ்வாறாக, மே தினத்தன்று கூட ஒரு விவசாயியோ அன்றி தொழிலாளியோ மிகவும் உற்சாகத்தோடு தனக்குரிய விழாவை மேதினத்தைப் பார்க்கும் சந்தர்ப்பாங்கள் இல்லை. இதற்கு காரணங்கள் பல உள்ளன.

தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவென ஆரம்பிக்கப்பட்ட தொழிற் சங்களின் தலைவர்கள் கூட முதலாளித்துவத்தின் பிரதிநிதியாக உள்ள அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகள் ஆகிவிடுகின்றனர். இதனால் இந்த தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அரசியலுக்குள் ஈர்க்கப்பட்டு, பின்னாளில் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ அன்றி அமைச்சர்களாகவோ உயரத்திற்குச் சென்று இறுதியில் தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கும் வகையில் செயற்படுகின்றார்கள். இவ்வாறாக உலகின் பல நாடுகளிலும் இலங்கையிலும் இந்தியாவிலும் நாம் இங்கே குறிப்பிட்ட துரோகங்களைத் தான் தரிசித்து வருகின்றோம்.

அமெரிக்காவில் 1890ஆம் ஆண்டு 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்னும் கோரிக்கையை வலியுறுத்தியும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கேட்டும் தொழிலாளர்கள் போராடினர். இதை எதிர்த்து அமெரிக்க அரசு, ஈவிரக்கம் அற்ற தாக்குதலை நடத்தியது. ஏராளமான தொழிலாளர்கள் கொல்லப்ப்ட்டனர்.

உலகத் தொழிலாளர்களின் துன்பத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, முதலாளிகளை ஒழித்துக்கட்டி தொழிலாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான் அனைத்துவிதமான துன்பங்களும் தீரும் என்றும், முதலாளிகள் உலக வரலாறின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து வருகின்றனர் என்றும், இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வல்லமை தொழிலாளர்களிடம் மட்டும்தான் உள்ளது என்றும் கூறி நின்றார், ஒப்பற்ற பொதுவுடைமைக் கொள்கையை உலகுக்குத் தந்த ஆசான் காரல் மார்க்ஸ்.

ஆனால் அவ்வாறான உழைக்கும் மக்கள் பக்கம் சார்ந்து நின்றும் சிந்தித்தும் செயற்பட்ட மகான்கள் தோன்றிய நாடுகளில் கூட இன்றும் தொழிலாளர்கள் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆனால், தொழிலாளர்களும் விவசாயிகளும் இன்னும் தமக்குரிய நாளாக இந்த "மே தினத்தை" கொண்டுகின்ற அல்லது ஒன்றாகக் கூடி தமக்காக குரல் கொடுக்கின்ற ஒரு நாளின் புனிதத்தை நாம் இன்றைய நாளில் மரியாதையோடும் உணர்வோடும் வரவேற்க வேண்டும். எம்மைப் போன்ற தோழர்களோடு சேர்ந்து "உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்" என்று உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்.

அப்போதுதான் அவர்களுக்கு எதிராகத் தொடுக்கப்படுகின்ற அடக்கு முறைகளும் சுரண்டலும் ஓரளவாகினும் குறையும் என்றே நாம் நம்புகின்றோம்.

# "ஒன்றாரியோ வாழ் சாரதிகள் தற்போது அதிகம் வாகனங்களை செலுத்துவதில்லை. எனவே காப்புறுதிக் கட்டணங்களைக் குறைக்க வேண்டும்" "ஒன்றாரியோவில் விரைவில் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக் கூடிய துறை சார்ந்த நிறுவனங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கும்"

## முக்கிய அறிவிப்புக்களை ஊடகங்களின் மூலம் விடுத்த ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள்

"ஒன்றாரியோ வாழ் சாரதிகள் தற்போது அதிகம் வாகனங்களை செலுத்துவதில்லை. எனவே காப்புறுதி நிறுவனங்கள் உடனடியாக, அவர்களுக்குரிய மாதாந்த அல்லது வருடாந்த காப்புறுதிக் கட்டணங்களைக் குறைக்க வேண்டும;"



"ஒன்றாரியோ மாகாணத்தில் உடனடியான நடவடிக்கையாக, மிக விரைவில் பொருளாதாரத்தை மீட்டெடுக்கக் கூடிய வகையில் பல துறை சார்ந்த நிறுவனங்கள் மீண்டும் இயங்கத் தொடங்கும்"

இவ்வாறான சில முக்கிய அறிவிப்புக்களை குயின்ஸ்பார்க் என்று அழைக்கப்படும் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற கட்டத்திலிருந்து இணைய வழி ஊடாகவும் வேறு சாதனங்கள் ஊடாகவும், தேசிய ஊடகங்களின் மூலம் விடுத்த ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள், இந்த முயற்சிகளுக்கு ஒன்றாரியோ வாழ் மக்கள் அனைவரும் உடனடியாக தங்கள் ஒத்துழைப்பை வழங்கி எமது மாகாணத்தை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டு எடுக்கவும், கொரோனாவின் தாக்கத்திலிருநது விடுபட்டு நிம்மதியான வாழ்க்கையை மேற்கொள்ளவும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் " நாங்கள் உடனடியாக ஆரம்பிக்கவுள்ள 'மீண்டும் வேலை செய்யத் தொடங்குவோம்' என்ற திட்டத்தின் அடிப்படையில் மிகவும் கவனமாக இயங்கும் வகையில் சில கட்டுப்பாடுகளையும் எல்லைகளையும் நாம் தீர்மானித்த பின்னர் அறிவிப்போம். இதற்காக பல அமைச்சர்கள் அடங்கிய குழுக்கள் இரவு பகலாக பணியாற்றி வருகின்றார்கள். நாம் இவ்வாறு மீண்டும் வேலை செய்யத் தொட்ங்கும் போது, வேலைத்தள பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய பல விடயங்களுக்கு முன்னரிமை கொடுக்க வேண்டும் என அனைவரும் பணிக்கப்படுவார்கள். இந்த திட்டத்தின் படி சுமார் 65 துறைகள் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்கும் அமைப்புக்கள் ஆகியன இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பெறும்.

நாம் தீர்மானித்துள்ள நிறுவனங்கள் பின்வரும் துறைகள் சார்ந்து இருக்கும். சுகாதாரத்துறை, சில்லறை விற்பனை நிலையங்கள், வாகன உற்பத்தி நிறுவனங்கள், உற்பத்தி சார்ந்த தொழிற்சாலைகள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், சுற்றுலாத் துறை, ஹோட்டல் துறை, உணவகங்கள் மற்றும் உணவு வழங்கும் சேவைகள் கொண்ட நிறுவனங்கள், விவசாய உற்பத்தி நிறுவனங்கள், கட்டட நிர்மானத் துறை, போக்குவரத்து மற்றும் போக்குவரத்துச் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள், அத்தியாவசிய சேவைகளான மின்சாரம் ,நீர் வழங்கல் எரிவாயு விநியோகம் தொடர்பான நிறுவனங்கள் இந்த புதிய திட்டத்திற்குள் அடங்கவுள்ளன.

மேலும், எமது அரசாங்கம் அமுல் செய்யவுள்ள இந்த ஏற்பாட்டையோ அல்லது கட்டுபாட்டுக்களையோ மீறுவோரைக் கண்டு பிடித்து தண்டனைகள் வழங்க புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள சுமார் 60 தொழிற் பரிசோதகர்கள் தங்கள் கடமைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளார்கள் என்றும் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்கள் அறிவித்துள்ளார்.

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!
உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.
- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca
MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1
ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

# கொரோனா நோய்க்கிருமியின் பரவலும் பத்திரிகைத்துறையில் ஏற்பட்ட திருப்பமும்...



"ஒரு பத்திரிகை வெளிவராவிட்டால் சுயமாக சிந்திப்பவர்களுக்கும், மக்களுக்காக போராடுகின்றவர்களுக்கும் வாய்ப்பற்று போகின்றது என்றுதான் அர்த்தம்"

"மக்களின் உணர்வினை அறிந்து அதனைவெளியிடுவது இதழ்களின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கவேண்டும். மற்றொன்று மக்களிடம் உணர்வுப் பூர்வமான எண்ணங்களை உருவாக்கவேண்டும், அத்தோடு பொது மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளை துணிச்சலாக எடுத்துக்கூற வேண்டும்"

"கொவிட்-19" அதாவது கொரோனா வைரஸ் பரவலின் அடுத்து நாட்டில் பல்வேறு விடயங்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மக்களின் அன்றாட நடவடிக்கை,வியாபாரம்,வர்த்தகம், கல்வி, பொருளாதாரம் மற்றும் சூழல் போன்ற பல முக்கிய விடயங்களில் திருப்பங்கள், மாறற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறு ஏற்பட்ட திருப்பங்கள், மாற்றங்களில் சில நன்மைகளை ஏற்படுத்திய அதேநேரம் அநேக தீமைகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகை என்பது ஒரு நாட்டுக்கு உயிர்போன்றது. ஒரு நாடு உயிர்ப்புடன் இருக்கவேண்டுமென்றால் அந்தநாட்டில் பத்திரி கைதுறைஉயிர்ப்புடன் இருக்க வேண்டும்.காரணம் அது நாளாந்த செயற்பாடுகளை, செய்திகளை தெரிவித்துநாட்டையும் நாட்டு மக்களையும் உயிருள்ள ஜீவன்களாக வைத்திருக்கும்.

கோவிட்-19 ஒரு மாதகாலம் காணப்படுவதனால் நாட்டுமக்கள் அனைவரும் வீட்டுக்குள் முடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு பல சவால்களுக்கும் முகம் கொடுக்கவேண்டியநிலைஏற்பட்டுள்ளது. அத்தோடு இதன்காரணமாக நாளாந்தம் வெளிவரும் அச்சு ஊடகமும் பாரிய சவாலுக்கு முகம் கொடுத்துள்ளதை அவதானிக்க கூடியதாய் உள்ளது. தொடர்ச்சியாக பத்திரிகை அச்சிடாமல் இருப்பதனால் அது பொதுமக்கள் மத்தியிலும் வாசகர் மத்தியிலும் தனது செல்வாக்கை இழக்க கூடும் என்பதனால் தற்பொழுது அனைத்து அச்சு ஊடகங்களும் மின்னிதழ் வடிவத்திற்கு மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொதுசெய்திகளையும், கருத்துக்களையும், பொழுதுபோக்குகளையும் முறையாக நம்பகரமான வகையில் இதழியற் பணிகள் இணையத்தின் வழியே வெளியிடுகின்றன.

கடந்த காலங்களில் ஒரு சில பத்திரிகைகளைஅச்சிட்டு வெளியிட முடிந்ததோடு இதுவரையிலும் முழுமையான பத்திரிகைகள் அச்சிடப்பட்டு வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது வாசகர்கள் மத்திலே பெரும் தாக்கத்ததை ஏற்படுத்தியுள்ளது. மின்னிதழ் என்பது நவீன தொழிநுட்பங்களை பயன்படுத்தி வலைத்தளம் ஒன்றில் பதிவேற்றப்பட்ட கோப்பு வடிவிலோ அல்லது வலைப்பக்க வடிவிலோ இருக்கும் பத்திரிகையாகும்.

அவ்வாறு வெளிவந்த சில பத்திரிகைகளும் மிகவும் குறைந்த பட்ச விலையிலே விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் பத்திரிகைபக்கங்களின் எண்ணிக்கையிலும் குறைவாகவே இருந்தது. காரணம் நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழ்நிலையில் முக்கியவிடயங்கள் மாத்திரமே பத்திரிகைகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளதால் ஆகும். இது எழுத்தாளர்களுக்கும் பாரிய பிரச்சினையாகவே உள்ளது.

உலக வரலாற்றில் முதலாவதாக இணையத்தின் ஊடாக மின்னிதழ் வடிவத்தில் பத்திரிகைவெளியிட்டது 1974 ஆம் ஆண்டே ஆகும் என வரலாறு கூறுகிறது. இருப்பினும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய இராச்சியம் குறிப்பிட்ட பல பத்திரிகைகளை மின்னிதழ் வடிவமாக வெளியிட்டிருந்தபோதும் அவை அச்சிடப்பட்ட பத்திரிகையைபோல பிரபல்யம் அடைந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டளவில் மின்னிதழ் வடிவான பத்திரிகையை விருப்பத்தோடு வாசிப்பதற்கு 65 வீதமானோர் காணப்பட்டிருந்தும் அது 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிக குறைவாகவே காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்து.அச்சிடப்பட்ட ஒரு பத்திரிகையில் வர்த்தக மற்றும் அறிவித்தல் விளம்பரத்திற்காக 75 வீதம் இலாபமே கிடைக்கப் பெறுகின்ற பொழுது மின்னிதழ் பத்திரிகை விளம்பரத்திற்கு மிகக் குறைந்தவீத அளவே இலாபம் கிடைக்கவும் பெறுகின்றது. உலக நடப்பு இவ்வாறு இருக்கும் பட்சத்தில் இந்த மின்னிதழ் வடிவபத்திரிகையை அறிமுகப்படுத்திய பொழுது அதனை வாசகர்கள் பெற்றுக்கொள்வதற்கு கட்டணம் செலுத்த வேண்டியநிலையும் ஏற்பட்டிருந்தது. அது வாசகர்கள் மத்தியில் பெரிதான வரவேற்பை பெற்றிருக்கவும் இல்லை. ஆனால் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் காராணமாக ஊரடங்கு இடப்பட்டுள்ளது.

மக்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டு இருக்கின்றனர். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் பத்திரிகைகள் தற்பொழுது புதியபரிணாமத்துடன் வாசகர் மனதை கவரும் மின்னிதழ் வடிவமாக பவனிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கோவிட்-19 காரணமாக உலகம் முழுவதும் தற்பொழுது ஊடகத்துறை உள்ளிட்ட முக்கிய துறைகள் முடக்கப்பட்டநிலையில் காணப்படுவதோடு பெரும்பாலான மக்கள் தொழிலுக்கு செல்லவும் முடியதவண்ணம் திண்டாடுகின்றனர், வறுமையும் ஒருபக்கம் வாட்டுகிறது .

ஆகையினால் அச்சிடப்பட்ட பத்திரிகைகளை விநியோகம் செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. ஆகையினால் பத்திரிகைகள் மின்னிதழ் வடிவமாகமாற்றப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுள்ளது. அதுகுறிப்பிட்டசில இணைய வசதி உள்ளோருக்கு மட்டுமேபயன்பெற்றுக் கொள்ளமுடியுமாக உள்ளது. எமது நாட்டின் இணைய பாவனையாளர்கள் 35 வீதமானவர்களே உள்ளனர் என்று தரவுகள் குறிப்பிடுகின்றது. ஆகவே இது எந்தளவு மக்களைசென்றடைகின்றது என்பது கேள்விக்குறியே. பொதுவாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் 40 வயதிற்கு குறைவானவர்கள் மின்னிதழ் அல்லது அச்சிடப்பட்ட பத்திரிகைகளை பார்ப்பதும் வாசிப்பதும் இல்லை என்ற கருத்து நிலவுகின்றது. ஆகவே அவர்கள் தகவல்கள் மற்றும் செய்திகளை பெற்றுக் கொள்ள முனைவது முகப்புத்தகம் போன்ற சமூகவலைத்ததளங்களிலே என்பதுஆய்வுகளில் வெளிவந்ததுள்ள முடிவாகும்.

மேலும் எமதுநாட்டில் இணையப் பாவனையைமேற்கொள்கின்றவர்களில் 85 வீதமானோர் தங்களது கையடக்க தொலைபேசிகளிலே (அதாவது ஸ்மார்ட்போன்களிலே) இயக்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தகையடக்க தொலைபேசி அதாவது ஸ்மார்ட்போன்களில் திரையமைப்பு மிகவும் சிறியது. ஆகவே இந்த மின்னிதழ் பத்திரிகைகளை வாசிப்பதிலும் அதனை கையடக்க ஆவண வடிவத்திலும் பெற்றுக்கொள்வதிலும் பாரிய சிரமத்திற்கு ஆளாகியும் உள்ளார்கள். அத்தோடு பத்திரிகையை சந்தைப்படுத்துவதற்கு தற்போதைய சூழ்நிலையில் முடியாதுள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

இன்றைய காலகட்டத்தில் இணையப் பாவனையானது அதிகரித்துள்ள போதும் இது நாடளாவிய ரீதியில் நகரமட்டத்தில் அதிகரித்துள்ளதே தவிர கிராமிய மட்டத்தில் இதன் அபிவிருத்தி மந்தகதியில் தான் இருக்கின்றது. அதே போல பத்திரிகையைவாசிப்பதில் நகரத்தை அண்டியவர்களைவிடகிராமத்தை அண்டியவர்களே அதிகம் ஆர்வம் காட்டுவதும் குறிப்பிடத்தக்கது. காரணம் வேவைப்பளு, இயந்திர வாழ்க்கை, இடையூறு போன்றவற்றை குறிப்பிடலாம். ஆகவே இந்தமின்னிதழ் வடிவான பத்திரிகையை தொழிற்றுறையை சார்ந்தவர்கள் உள்ளிட்டவர்கள் தங்களது ஸ்மார்டபோன்களின் ஊடாகவே நாளாந்த செய்திகளை வாசிக்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை.

**நன்றி, கொழும்பு "தினகரன்" எழுதியவர்: ஜயகுமார் க்ஷான், மொனறாகலை**

# கொரோனநோய்க்குள்ளானவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையில் உலகளவில் தமிழ்நாடுதான் முன்னணி வகிக்கின்றதா??

உலகின் பெரும்பாலான நாடுகளை மோசமான வகையில் அச்சுறுத்திவரும் "கொரோனா" வைரஸ் நோயின் பிடிக்குள் சிக்கியுள்ள நோயாளர்களைக் காப்பாற்ற அந்தந்த நாடுகளில் உள்ள மருத்துவத்துறை மற்றும் அனைத்து துறையினரும் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில், உலகின் வல்லரசாகக் கருதப்படும் அமெரிக்காவில், "கொரோனா" நோயின் தாக்கத்திற்கு உள்ளாதி மரணித்தவர்களின் எண்ணிக்கை 51 ஆயிரத்தை தாண்டியுள்ளது என்ற செய்தி உலகெங்கும் பரவியுள்ளது. இவ்வாறான நிலையில் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை குறைந்த எண்ணிக்கையில் உள்ள அதேவேளை, நோய்க்குள்ளானவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைமுறைகளும் ஏனைய நாட்டவர்களால் உற்று நோக்கப்படும் ஒரு விடயமாகவே உள்ளது.

இவ்வாறான நிலையில் உலக நாடுகளில் இந்தியாவில் ஒரு மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் மட்டுமே மிகவும் சிறப்பானதும் முன்னெச்சரிக்கையோடு அளிக்கப்படுகின்ற சிகிச்சையாக உள்ளது என்ற கணிப்பு வெளியாகியுள்ளதாக சில மருத்துவத்துறை ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் சென்னையிலிருந்து எழுதியுள்ளார்.

உதாரணமாக பிளாஸ்மா தெரபி, ஹைட்ரோக்சிகுளோரோகுயின் ஆகிய சிகிச்சை முறைகள் இல்லாமலே கொரோனாவை தமிழகம் வேகமாக குணப்படுத்தத் தொடங்கி உள்ளது. தமிழகத்தில் கொரோனா நோயாளர்கள் அதிகளவில் குணப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களில் மொத்தம் 44மூ பேர் குணப்படுத்தப்பட்டு உள்ளனர். இந்தியாவில் கொரோனா நோயாளிகளை அதிகம் குணப்படுத்தியதில் தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. கொரோனாவை வேகமாகக் குணப்படுத்துவதில் உலகில் தென் கொரியாதான் முதல் இடத்தில் இருக்கிறது. இதற்குக் காரணம், தென் கொரியாவில் பிளாஸ்மா தெரபி பயன்படுத்தப்பட்டதாகும்.

அதாவது பிளாஸ்மா தெரபி மூலம் கொரோனாவில் இருந்து குணமான நபர்களின் இரத்தத்தில் இருக்கும் பிளாஸ்மாவை எடுத்து கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர்களின் உடலில் செலுத்துவார்கள். இதன் மூலம் அவர்களுக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கும். இதுதான் தென்கொரியாவில் கொரோனா குணமடையக் காரணம்.

தமிழகம் தற்போது தென்கொரியாவை விட மிக வேகமாக நோயாளிகளைக் குணப்படுத்துகிறது.



கொரோனா நோயாளிகளை குணப்படுத்தும் வேகத்தில், தமிழகத்தை ஒரு தனிநாடாகப் பார்த்தால், அதில் தமிழகம்தான் முதல் இடத்தில் இருக்கும்.

ஆனால் தமிழகத்தில் இப்படி பிளாஸ்மா தெரபி சிகிச்சை முறை பயன்படுத்தப்படுவது இல்லை. சிறப்பான சிகிச்சை முறை எதுவும் இல்லாமலேயே தமிழகம் நோயாளிகளைக் குணப்படுத்தப்படுகிறது. உதாரணமாக அமெரிக்கா உட்பட பல நாடுகளை தீவிரமாக பாதிக்கப்பட்டு இருக்கும் கொரோனா நோயாளிகளைக் குணப்படுத்த ஹைட்ரோக்சிகு ளோரோகுயின் மருந்தை பயன்படுத்துகின்றன. இங்கிலாந்திலும் ஹைட்ரோக்சிகு ளோரோகுயின் மருந்தை பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் அங்கெல்லாம் இறப்பு வீதம் மிகவும் அதிகமாக உள்ளது. ஹைட்ரோக்சிகுளோரோகுயின் என்பது மலேரியாவிற்கு பயன்படுத்தப்படும் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடிய மருந்து ஆகும். ஆனால் தமிழகம் இந்த ஹைட்ரோக்சிகுளோரோகுயின் மருந்தைக் கூட நோயாளிகளுக்கு பயன்படுத்துவது இல்லை. மத்திய சுகாதாரத்துறை அனுமதி அளித்தும் கூட ஹைட்ரோக்சிகுளோரோகுயின் மருந்தை தமிழக சுகாதாரத்துறை பயன்படுத்துவது இல்லை.

இப்படி கொரோனாவிற்கு எதிரான சிறப்பான சிகிச்சை எதையும் தமிழகம் கடைப்பிடிக்கவில்லை. ஆனாலும் தமிழகம்தான் அதிகமான நோயாளிகளை இந்தியாவில் குணப்படுத்தி உள்ளது. தமிழகம் எப்படி இந்தச் சாதனையை செய்தது என்று பலருக்கும் கேள்வி எழுந்தது.

இதற்கான விடை மிக எளிதானது, அடிப்படையானது. ஆம் தமிழக மருத்துவர்கள் மிக அடிப்படையான வி'யங்களில் கவனம் செலுத்தி கொரோனா நோயாளிகளைக் குணப்படுத்தி வருகிறார்கள்.

கொரோனா என்பது நமது உடலின் எதிர்ப்பு சக்தியை இல்லாமல் செய்து அதன் பின்னர் நம்மைத் தாக்கி அதன் மூலம் நமது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய வைரஸ் ஆகும். இதனால் உடலில் எதிர்ப்பு சக்தியை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருப்பதன் மூலம் கொரோனாவை கட்டுப்படுத்தி, அதன் விளைவுகளைக் கட்டுப்படுத்தி, மொத்தமாக கொரோனாவை குணப்படுத்த முடியும்.

கொரோனா ஏற்பட்டால் அதன் பக்க விளைவாக காய்ச்சல், இருமல், மூச்சு விடுவதில் சிக்கல் ஏற்படும். இதனால் மூச்சு விடுவதில் சிக்கலுக்கு எதிரான மருந்து, காய்ச்சல் மருந்து, தடிமன் மருந்து மற்றும் வயிற்றுப்போக்கு மருந்துகளை மட்டும் தொடர்ந்து கொடுத்து வர வேண்டும். வைரஸ் தானாக குணமாகும் வரை இதைச் செய்ய வேண்டும். இதன் மூலம் கொரோனா பாதிப்பை முடிந்த அளவு கட்டுப்படுத்த முடியும் என்கிறார்கள் தமிழக மருத்துவர்கள்.

தமிழக மருத்துவர்கள் இப்படித்தான் கொரோனா நோயாளிகளுக்கு தொடர்ந்து மருந்துகளைக் கொடுத்து எதிர்ப்பு சக்தியை அளித்து வருகிறார்கள். எதிர்ப்பு சக்தி குறையாமல் தொடர்ந்து மருந்துகள் மூலம் அதை அதிகரித்துக் கொண்டே இருக்கிறார்கள். இது கொரோனா பாதிப்பை கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தும். அதேபோல் இன்னொரு பக்கம் கொரோனா நோயாளிகளுக்கு தமிழக அரசு மிகவும் சிறப்பான உணவுகளை வழங்கி வருகிறது. இதுவும் கூட கொரோனாவை குணமாக்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

முழுக்க முழுக்க நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகளை மட்டும் கொடுக்கின்றனர். எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகள் என்னவெல்லாம் இருக்கிறதோ அதை எல்லாம் கொடுத்து வருகிறார்கள். மூன்று வேளை உணவுக்குப் பதில் 5 வேளையாக உணவை பிரித்துக் கொடுக்கிறார்கள்.

அதேபோல் கபசுர குடிநீர், எலுமிச்சை நீர், இஞ்சி நீர் என்று வரிசையாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் குடிநீர்களை அதிக அளவில் கொடுத்து எதிர்ப்பு சக்தியை அதிகரித்து வருகிறார்கள். நோயாளிகளை தீவிரமாகக் கண்காணிப்பது, அவர்களின் எதிர்ப்பு சக்தியை கொஞ்சம் கூட குறையாமல் பார்த்துக் கொள்வது, அவர்களுக்கு வேறு ஏதாவது குறைபாடு இருந்தால் அதற்கும் மருந்து கொடுத்து சரி செய்வது... இதுதான் தமிழகம் கொரோனாவிற்கு எதிராக செய்யும் சிகிச்சை முறையாகும். இதுதான் இத்தனை வேகமாக தமிழகத்தில் கொரோனா நோயாளிகள் குணமடைய காரணம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

# கொன்விட்-19 சூழ் நிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு வகைகள் வட்டு- இந்து வாலிபர் சங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.








தற்போது எமது தாயகத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் பல கட்டங்களாக உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தினமும் சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சங்கரத்தை J/159 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்களை தந்துதவுமாறு சங்கரத்தை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் கடிதம் மூலம் வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இன்றைய தினம் ரூபா 1,000 பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் தலா 50 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக இதுவரை 36 கட்டங்களாக பனிப்புலம், சங்கரத்தை , துணவி, முன்கோடை, அராலி வடக்கு , அராலி மேற்கு, வட்டுத்தெற்கு, வட்டுத்தென்மேற்கு, சில்லாலை தெற்கு சாந்தை, பொன்னாலை, சுழிபுரம் மத்தி, சுழிபுரம் கிழக்கு மற்றும் நாவலி தெற்கு ஆகிய கிராமங்களில் சுமார் 1515 குடும்பங்களுக்கு பதினாறு இலட்சத்து ஐயாயிரத்து ஐந்நூற்று இருபத்தைந்து (1,605,525) ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இலங்கை சமூக சேவைகள் திணைக்களத்தாலமேற்கொள்ளப்பட்ட திட்ட ஆய்வில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும்,கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை இலங்கையில் முதலிடம் பெற்றுள்ளது.



யாழ்ப்பாணத்தில், 2003 ஆம் ஆண்டு கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களால் நிறுவப்பட்ட இப்பாடசாலை சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டுவருகிறது. சர்வதேசரீதியில் மூன்று தடவை விசேட தேவைக்குரிய மாணவர்களின் ஒலும்பிக் போட்டியில் கிறீஸ்நாட்டிலும், அவுஸ்ரேலியாவிலும்,அமெரிக்காவிலும் இப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியதுடன் பதக்கங்களும் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக, இலங்கையின் சமூக சேவைகள்திணைக்கள பணிப்பாளர் ஹரத் சில நாட்களுக்கு முன்னர் கடிதம் மூலம் இவ் விருது பற்றி கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களுக்கு அறிவித்துள்ளார்.

## மாமனிதர் சிவராம் (தராக்கி) அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி வவுனியாவில் அனுஸ்டிக்கப்பெற்றது



தமிழர் பிரச்சினையை சர்வதேச அரசியல் மயப்படுத்தியவர்களில் முதன்மையானவர் ஊடகவியலாளர் தராக்கி. ஆனால் அவரது படுகொலைக்கு நீதியைப் பெறுவதற்கு கூட, சர்வதேச விசாரணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பார் கோரவில்லை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் மூளையாக தொழிற்பட்டவர் அரசியல் ஆய்வாளர் தராக்கி. ஆனால் இன்று மாமனிதர் தராக்கியை படுகொலை செய்தவர்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுத்து கொலைகாரர்களின் கூடாரமாக மாறியுள்ளது தமிழ் தேசியக் கூட்டமைப்பு மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் 28 ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு கடத்தி செல்லப்பட்டு சிங்கள அரசின் கைக்கூலிகளால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமாகிய தர்மரத்தினம் சிவராம் (மாமனிதர் தராக்கி) அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியாவில் ஆயிரத்து நூற்று ஐம்பது நாட்கள் கடந்தும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை, தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் நடத்தி வருகின்றனர்.

ஏ9 வீதிக்கு அருகே அமையப்பெற்றுள்ள தமது போராட்டப் பந்தலில் இன்று 28.04.2020 செவ்வாய்க்கிழமை 1167 ஆவது போராட்ட நாளில், மாமனிதர் தராக்கி அவர்களின் உருவப்படத்தை காட்சிப்படுத்தி மெழுகுவர்த்திகள் ஏற்றி மலர் தூவி தமிழர் தாயக சங்கத்தினர் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தமிழர் பிரச்சினையை சர்வதேச அரசியல் மயப்படுத்தியவர்களில் முதன்மையானவர் ஊடகவியலாளர் தராக்கி. ஆனால் அவரது படுகொலைக்கு நீதியைப் பெறுவதற்கு கூட, சர்வதேச விசாரணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பார் கோரவில்லை என்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் மூளையாக தொழிற்பட்டவர் அரசியல் ஆய்வாளர் தராக்கி. ஆனால் இன்று மாமனிதர் தராகியை படுகொலை செய்தவர்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுத்து கொலைகாரர்களின் கூடாரமாக மாறியுள்ளது தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்றும் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை தமிழர் தாயக சங்கத்தினர் காட்சிப்படுத்தியிருந்தனர்.

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவிகதத்தில் அடைவு பிடிக்கப்படும்

PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.

Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

SKN FINANCIAL

www.sknfinancial.com




கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# மரண அறிவித்தல்

## திரு. செல்லத்துரை குகதாஸ்



மலர்வு: 09-02-1952

இறப்பு: 27-04-2020

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும். கொழும்பில் வசித்துவந்தவருமான செல்லத்துரை குகதாஸ் அவர்கள் 27-04-2020 அன்று கொழும்பில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை – பகவதியம்மா தம்பதிகளின் அன்பு கனீஸ்ட புத்திரனும்,
காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - நாகலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும்,
பிருந்தாதேவியின் அன்புக் கணவரும்.
துஷ்யந்தி (கனடா), சத்தியதாசன் (கொழும்பு). ஜீவன்யா (கனடா), தர்சன் (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபி(கனடா), வித்தியா(கொழும்பு), (பிரதீபன் கனடா) ஆகியோரின் அன்பு மாமாவும்,
காலஞ்சென்றவர்களான சத்தியசீலன், குமரகுருபரன். உருத்திரசீலன் மற்றும் பரமேஸ்வரி (இலண்டன்), தனலஷ்மி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,
காலஞ்சென்றவர்களான இராஜகோபால், நடேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களான கிரிதரன், கண்ணன் ஆகியோரின் மைத்துனரும்,
காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் திலகமணி, நவரட்ணதேவி (மணி), பாலாம்பிகை (பாலா), கௌரி, ராணி, கேமா, பவா ஆகியோரின் மைத்துனியும், பிரக்ரிதி, மிருத்திகா ஆகியோரின் அருமைத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனத்தை மயானத்தில் நடைபெற்று தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: குடும்பத்தினர்
குகதாஸ் சத்தியதாசன் (மகன்): 011 2347159 (கொழும்பு)
துஷி – கோபி (மகள், கனடா): (647) 618-2085

www.uthayannews.ca

# பரவுவதைத் தடுக்கவும்.

## கோவிட்-19 மிகவும் ஆபத்தானது.

## வீட்டிலேயே இருக்கவும்.

## உயிர்களைக் காப்பாற்றுங்கள்.



**ontario.ca/coronavirus**
இணையத்துக்கு வருகை தாருங்கள்
ஒன்ராறியோ அரசுக்காக ஒன்ராறியோ அரசினால் வழங்கப்பட்டது.

Ontario

# கடந்த 52 ஆண்டு காலமாக மத்திய அரசினால் தமிழகத்திற்குத் தொடர்ந்து அநீதி தான் இழைக்கப்படுகின்றது என்கிறர் பழ. நெடுமாறன்

மேற்படி விடயம் தொடர்பாக தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை கீழே காணப்படுகின்றது.

இந்திய அரசின் நீர்வளத் துறையின் கீழ் காவிரி நதி நீர் வாரியமும் மற்றும் கிரு‘ணா, கோதாவரி வாரியங்கள் கொண்டுவரப் படுவதாக குடியரசுத் தலைவரின் ஆணையின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் நிர்வாகத்திலிருந்து 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டம் குறிப்பாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. இது ஆழமான உள்நோக்கம் கொண்டதாகும். ஏனென்றால் நதி நீர் வாரியம் அமைக்கப்பட்ட உடன் அதற்கு சிவில் நீதிமன்றத்திற்குரிய அதிகாரங்கள் அனைத்தும் உண்டு என இச்சட்டம் கூறுகிறது. மேலும் வாரியத்தின் நிர்வாக செலவினங்களை மத்திய அரசும் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும். வாரியம் ஆண்டு தோறும் தனது வரவு செலவுத் திட்டக் கணக்கை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். இதைத் தவிர வாரியத்தின் நடவடிக்கைகளில் குறுக்கிடும் அதிகாரம் மத்திய அரசுக்குக் கிடையாது. எனவே தான் இச்சட்டம் தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் அனைத்து நதிகளையும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முன்னோட்டமாக இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது என்ற ஆழமான ஐயம் ஏற்பட்டுள்ளது.

நதி நீர் வாரியச் சட்டம் அத்தியாயம் 3, பிரிவு 13-இன் கீழ் நீர் சேமிப்பு, கட்டுப்பாடு, நீர்ப் பங்கிடுதல் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு ஆணைப் பிறப்பிக்கும் அதிகாரம் வாரியத்திற்கு உண்டு. நதி நீர் வாரியம் தன்னாட்சி அதிகாரம் படைத்த ஒரு அமைப்பென நதி நீர் தாவாச் சட்டம் கூறுகிறது. எனவே தான் அந்தச் சட்டத்தை நிர்வாக அமைப்பிலிருந்து மத்திய அரசு ஒதுக்கி, நீர்ப் பாசனத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நதி நீர் வாரியங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் விளைவாக இவற்றின் செயல்பாட்டில் மத்திய அரசின் குறுக்கீடு இருக்கவே செய்யும்.

கடந்த கால தமிழகத்தின் அனுபவம் இதற்குச் சான்றாகும். 1968-ஆம் ஆண்டில் காவிரிப் பிரச்னை உருவான போது பேச்சு வார்த்தை என்ற பெயரால் 22 ஆண்டு காலமாக, அதாவது 1990 வரை, கர்நாடகம் காலம் கடத்தி, அதற்குள் காவிரியின் துணை ஆறுகளில் அணைகளைக் கட்டி முடித்து விட்டது. அதற்குப் பிறகு நடுவர் மன்றம் அமைப்பதற்கு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டு, அதற்குப் பின்னரே நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்காக 17 ஆண்டுகள் தமிழகம் காத்திருக்க வேண்டியதாயிற்று. அத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட மேலும் 6 ஆண்டுகள் தமிழகம் காத்திருக்க வேண்டியதிருந்தது. அத்தீர்ப்பையும் கர்நாடக அரசு மதிக்க மறுத்த போது, உச்ச நீதிமன்றம் தலையிட்டு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும்படி 2007-ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது. அதன் தீர்ப்பில் வாரியத்தில் 3 முழு நேர உறுப்பினர்களும் 6 பகுதி நேர உறுப்பினர்களும் இருக்க வேண்டும் என்றும் காவிரி ஒழுங்காற்றுக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் திட்டவட்டமாக கூறப்பட்டது. ஆனால் அதுவும் காலங்கடத்தப்பட்டு 2018-இல் அதிகாரம் இல்லாத வாரியம் ஒன்று அமைக்கப்பட்டது. அதையும் மதிப்பதற்கு கர்நாடகம் பிடிவாதமாக மறுத்தது. ஆனால் உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் படி அமைக்கப்பட்ட வாரியத்தின்



நடவடிக்கைகளை கர்நாடகம் புறக்கணித்த போது, இதில் தலையிட்டு தமிழ்நாட்டிற்கு நீர் வழங்க வேண்டிய மத்திய அரசு, கர்நாடகத்தில் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக அமைதி காத்தது. காங்கிரசு அரசு இருந்த போதும் இப்போது பா.ஜ.க அரசு இருந்த போதும் அரசியல் ஆதாயத்திற்காக தமிழகத்திற்கு தொடர்ந்து அநீதி இழைக்கப்படுகிறது.

1968 தொடங்கி இன்று வரை 52 ஆண்டு காலமாக தொடரும் அநீதியாக இப்போது காவிரி நதி நீர் வாரியம் மத்திய நீர்ப் பாசனத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழக விவசாயிகளுக்கும் மக்களுக்கும் பெரும் அநீதி திட்டமிட்டு இழைக்கப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்திய அரசின் இந்த நிர்வாக ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் உடனடியாக வழக்குத் தொடரும்படி தமிழக அரசை வற்புறுத்துகிறேன்.

# புகழ் பெற்ற இந்தி நடிகர் ரிஷி கபூர் உடல் நலக்குறைவால் காலமானார்!




பழம்பெரும் இந்தி நடிகர் ரிஷி கபூர். 67 வயதான இவர் இயக்குனராகவும், பட தயாரிப்பாளராகவும் பணியாற்றியவர். பிரபல நடிகர் ராஜ் கபூரின் இரண்டாவது மகனான இவர் தந்தை நடிப்பில் வெளியான "மேரா நாம் ஜோக்கர்" (என் பெயர் ஜோக்கர்) என்ற படத்தில் குழந்தை நட்சத்திரமாக சினிமா உலகில் அறிமுகமானார்.

தொடர்ந்து 1973-ம் ஆண்டு பாபி என்ற படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகி பல படங்களில் நடித்துள்ளார். இதற்கிடையில், 2018-ம் ஆண்டு ரிஷி கபூருக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டது. இதனால், அவர் கடந்த ஒரு வருடமாக அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்தார். இதையடுத்து, கடந்த செப்டம்பர் மாதம் அவர் அமெரிக்காவில் இருந்து இந்தியா திரும்பினார். பின்னர் மகாரா‘டிரா மாநிலம் மும்பையில் உள்ள அவரது வீட்டில் குடும்பத்தினருடன் வசித்து வந்தார்.

இந்நிலையில், வீட்டில் இருந்த ரிஷி கபூருக்கு இன்று திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதையடுத்து, அவர் உடனடியாக மும்பையில் உள்ள ஹெச்.என். ரிலையன்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நேற்று நடிகர் இர்பான் கான் மரணமடைந்த துயரத்தில் இருந்து மீளாத பாலிவுட் பிரபலங்களுக்கு ரிஷி கபூரின் மறைவு மேலும் அதிர்ச்சி அளித்துள்ளது.


## SOUTH INDIAN FOOD CHEF

SARAVANAA BHAVAN is actively seeking for motivated South Indian Food Chefs to work at our restaurant.

**1571 Sandhurst Circle #153, Scarborough, ON, M1V 1V2**
**4559 Hurontario street # 12B, Mississauga, On, L4Z 3L9**

Title of Position: South Indian Food Chef (NOC 6321) Vacancies: 4

Type of Position: Permanent, full time,
Wage & Hours: $23.10 per hour, 40 hours per week,Overtime pay after 44 hours per week

Job Duties:
- Guide preparation of exquisite South Indian cuisine
- Prepare and cook complete South Indian cuisine meals on a daily basis
- Help other cooks in the kitchen by instructing cooks in preparation, cooking, garnishing and presentation of food
- Prepare special menu items
- Demonstrate excellent food preparation practices, portion control & end to end food production
- Preparing and catering meals for special events and receptions such as weddings and banquets
- Maintain a clean and sanitary workstation area including but not limited to tables, shelves, counters, grills, fryers, burners, ovens, flat top range and refrigeration equipment

Skills & Education Required:
- 1-2 years' experience in South Indian (Tamil) Cuisine
- Authentic South Indian cooking knowledge required
- Ability to work well with others
- Ability to work in a fast-paced environment
- Work under pressure
- No formal education required
- Minimal English required

Work Conditions and Physical Capabilities:
- Face-paced environment, tight deadlines, work under pressure, attention to detail, standing for extended periods

Benefits: Home leave and accommodations available

**www.saravanabhavan.ca**

# மலேசியாவில் கோவிட்-19:கட்டுப்பாட்டில் உள்ளது.

கொரோனா ஆட்கொல்லி கிருமி-யின் தாக்கம் மலேசியாவில் மெல்லக் குறைந்து வருக-ிறது ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளும் வருக-ிறது. இதன் தொடர்பிலான அண்மைக் கால புள்ளிவிவரத் தகவல் இதைத் தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. இதற்கெல்லாம் முகாந்திரமான காரணம், பன்னாட்டு சுகாதார அமைப்பேப் பாராட்டிய மலேசிய சுகாதாரத் துறையும் மலேசிய மக்களின் கட்டுப்பாடான வாழ்க்கை முறையும்தான்.

இன்று ஏப்ரல் 29, மாலை 4.40 மணி நிலவரப்படி மலேசியாவில் இதுவரை கொ-ரோனா கிருமித் தாக்குதலுக்கு ஆளானவர்கள் 5,945 பேர். இவர்களில் குணமாகி இல்லம் திரும்பியோர் 4,084 பேர். உலக அளவ-ில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி, மக்களை முடக்கி வைத்துள்ள இந்தக் கிருமியின் தாக்கத்திற்கு மலேசியத் திருநாட்டில் ஏப்ரல் 28-ஆம் நாள் வரை 100 பேர் இறந்துள்ளனர்.

இன்று புதன்கிழமை, இந்த நோய்க்கு ஒருவரும் பலியாகவில்லை.

அதேவேளை, துள்ளியமான மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படாத இந்தக் கிருமியின் தாக்குதலுக்கு ஆளானவர்களின் எண்ணிக்கை இன்று உயர்ந்து காணப்படுவதாக சுகாதாரத் துறை தலைமைச் செயலாளர் டத்தோ டாக்டர் நூர் ஹி‘ாம் அப்துல்லா தெரிவித்துள்ளார்.



கடந்த ஒரு வாரமாக சன்னமாக குறைந்து வந்த இந்த எண்ணிக்கை, ஏப்ரல் 28-ஆம் நாளில் 31-ஆக இருந்தது இந்த நிலையில், இன்று சற்று வியப்பும் பதற்றமும் ஏற்படும் விதமாக கொரோனா பாதிப்புக்கு இன்று ஆளானோர் எண்ணிக்கை நேற்றைய எண்ணிக்கையைப் போல மும்மடங்கை எட்டி நிற்கிறது் இன்று 94 பேர் கொரோனா-வின் கொடுங்கரங்களில் சிக்கியுள்ளனர்.

ஆனாலும், 94 பேரில் 72 பேர் வெளிந-ாடுகளில் இருந்து அண்மையில் தாயகத்திற்குத் திரும்பியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் கடந்த ஜனவரி 25-ஆம் நாளில்தான் முதன் முதலாக கொ-ரோனா கிருமிக்கு ஆளான நால்வர் அடையாளம் காணப்பட்டனர். அவர்கள், அனைவரும் வெளிநாட்டு சுற்றுப் பயண-ியர் ஆவர். சிங்கப்பூரில் இருந்து ஜோகூர் மாநிலத்தின் வழியாக நாட்டிற்குள் நுழைந்த சீன சுற்றுப்பயணிகள், அவர்கள்.

பிப்ரவரி 16-ஆம் நாள், இந்த எண்ணிக்கை 22-ஐத் தொட்டு, முதல் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த எண்ணிக்கை மளமளவென உயர்ந்து பிப்ரவரி 27-இல் ஆயிரத்தைத் தாண்டி அடுத்தக்கட்ட அலை-யை ஏற்படுத்தியது.

இந்த சந்தர்ப்பத்தில் நாட்டு மக்கள் அனைவரின் பார்வையும் புதிய நிருவாக நகரான புத்ராஜெயாவிலும் பாரம்பரிய நகரமான கோலாலம்பூரிலும் குவிந்தது.

காரணம், தேசிய அரசியலிலும் புதிய அரசாங்கத்திலும் ஏற்பட்ட வரலாறு காணாத அதிரடி திருப்பங்கள்.

நம்பிக்கைக் கூட்டணி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கில், பிப்ரவரி 22, சனிக்கிழமை எதிரணியைச் சேர்ந்த மலாய்க் கட்சியான அம்னோ, மலேசிய இந்தியர் காங்கிரஸ், மலேசிய சீனர் சங்கம் உள்ளிட்ட கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாறி மாறி பிரபல தங்கும் விடுதியில் சந்தித்தது, தேசிய அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்த, அடுத்த இரு தினங்களில் மகாதீர் முகம்மது பிரதமர் பதவியில் இருந்து விலக-ினார். அதை ஏற்றுக் கொண்ட மாமன்னர் அப்துல்லா ரியாத்துடின் அல் முஸ்த.்.பா பில்லா ‘ா அக்மட் ‘ா அல் முஸ்த.்.பா இடைக்கால பிரதமராக தொடரும்படி மக-ாதீரைக் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, அவர் தலைமை வகித்த பெர்சத்து கட்சி, ஆளும் கூட்டணியில் இருந்து விலகியது. இந்தச் சூழலில், தான் மீண்டும் பிரதமர் பொறுப்பை ஏற்க விரும்புவதாகவும் ஆனால், அரசியல் கட்சிகள் சாராது பொதுவான தேசிய அரசாங்கத்தை அமைக்க எண்ணுவதாகவும் மாமன்னரிடம் கோரிக்கை வைத்தார்.

இதற்கிடையில் கடந்த 1995 முதல் பிர-தமர் பதவிக்காகக் காத்திருக்கும் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகில் பிரதமராக முயன்றார். ஆளுந்தரப்பில் போதிய பெரும்பான்மை இல்லாத சூழலில், மகாதீருக்கு இதற்கு முன் ஆதரவு தெரிவித்தவர்கள் எல்லாம் இப்போது பின்வாங்கிவிட்ட நிலையில், அதிரடித் திருப்பமாக ஆளுங்கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற டான்ஸ்ரீ முகைதீன் யாசினுக்கு எதிரணியினர் ஆதரவு தெரிவித்ததால் மாமன்னர் அவருக்கு மார்ச் முதல் நாள் பிர-தமராக பதவிப் பிரமானம் செய்து வைத்தார்.

இதற்கான அறிவிப்பை அதற்கு முதல் நாள் பிப்ரவரி 29 சனிக்கிழமை மாலையில் மாமன்னர் அறிவித்த பின்னர்தான் அரசியல் கொந்தளிப்பு அடங்கிப்போனது.

பிரதமர் பதவி ஏற்ற முகைதீன், அமைச்சரவையை அறிவிக்காமல் அமைதி காத்ததால், மழை விட்டும் தூ வானம் தொடர்ந்ததைப் போல, மலேசிய அரசியலிலும் மக்கள் மத்தியிலும் ஓர் இனம் புரியாத அமைதியும் எதிர்பார்ப்பும் தொடர்ந்தது.

இதனால், கொரோ-னா பாதிப்பைப் பற்றி ஒட்டு மொத்த மலேசியாவும் மறந்தே போனது.

ஒருவழியாக மார்ச் 10-ஆம் நாள் புதிய அமைச்சரவையை அறிவித்தார் முகைதீன். மலேசிய வரலாற்றில் இல்லாத அளவிற்கு 70 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றனர். அதன் பின்னர்தான், கொ-ரோனா பற்றிய விழிப்புணர்வுக்கு மலேசிய திரும்பியது.

நிலைமை எல்லை மீறுவதை அறிந்த புதிய அரசு, அதிரடி நடவடிக்கையில் இறங்கியது. மார்ச் 18 முதல் இரு வார காலத்திற்கு நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையை அரசு பிறப்பித்தது. அந்த ஆணை அடுத்தடுத்து நீட்டிக்கப்பட்டு, தற்பொழுது நான்காவது முறையாக நீட்டிக்கப்பட்டு மே 12-ஆம் நாள் வரை நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணை தற்பொழுது அமலில் இருக்கிறது.



நக்கீரன்

மலேசியக் குடிமக்கள் உணவு வாங்கவும் மருத்துவத் தேவைகக்கும் அத்யாவசிய பொருள் கொள்வனவுக்கும் தங்கள் வசிப்பிடத்தில் இருந்து 10 கி.மீ. தூரம் வரை பயணிக்க அரசு அனுமதி அளித்தது. ஆனால், ஒருவர் மட்டுமே பயணிக்க முடியும் என்ற நிை-லயில் தற்பொழுது(ஏப்ரல் 29 முதல்) இருவர் பயணிக்க அரசு புதிய அனுமத-ியை அளித்துள்ளது. ஆனால், இருவரும் ஒரேக் குடும்ப உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டையும் இன்று விதித்துள்ளது. இருந்தாலும் இது மக்களுக்கு ஓரளவு ஆறுதலான விடயம். அதேவேளை, 10 கி.மீ. சுற்றளவு என்றிருந்த வரம்பை 15 கி.மீ. என்று தளர்த்தப்படுவதாக மூத்த அமைச்சரும் பாதுகாப்புத் துறைக்கு பொறுப்பேற்றுள்ளவருமான டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் இன்று பிற்பகலில் செய்த அறிவிப்பு பொது மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதற்கிடையில் நடமாட்ட கட்டுப்பாட்டு ஆணையை மீறுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதும் ஆயிர வெள்ளி அபராதம் அல்லது ஒரு மாத சிை-றவாசம் விதிக்கப்படுவதும் தொடர்கிறது. இதுவரை இதன் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் தேசிய அளவில் 21,749 பேர். ஏப்ரல் 28-ஆம் நாள் மட்டும் 643 பேரை காவல் துறையினர் வளைத்தனர்.

நோன்பு மாதம் தொடங்கப்பட்டுள்ள இந்த நிலையில், உலக மக்களைப் போல மலேசிய மக்களும் இந்த கொரோனா தொற்றுக் கிருமி பரவலுக்கு ஒரு முடிவு வராதா என்ற ஆதங்கத்திலும் எதிர்பார்ப்பிலும் உள்ளனர்.

**அடுத்த வாரம் சந்திப்போம்!**
**நக்கீரன் கோலாலம்பூர்.**




Preparation of Income Taxes
T1 and T2 with E/File

Location :
Unit 9- 40 Winges Road
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Drive, Markham,
Ontario L3S 3N6
Office Number 905-554-5606
Fax Number 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# "டாக்டர். பத்மா சுப்ரமணியம் – இன்றுள்ள பல நாட்டிய மணிகளுக்கு அவர்தான் குரு, வழிகாட்டி, இலக்கு எல்லாமே"



ஆம், அவர் ஒரு கலைக்கல்லூரி. பரதநாட்டியம் என்ற ஆடற்கலையின் அடையாளமாகிப்போனவர். இன்றுள்ள பல நாட்டியமணிகளுக்கு அவர்தான் குரு, வழிகாட்டி, இலக்கு எல்லாமே. மற்றெல்லோரையும் போலவே நானும் அவரை அக்கா என்றே அழைப்பேன்.

சென்னை வந்தது (1989) முதல் அவரின் நாட்டியத்திற்கு அடிமையாகிப் போனவர்களில் நானும் ஒருவன். அவருக்கு நாட்டியம் என்பது வாழ்க்கை மட்டுமல்ல, சுவாசம். பத்மா சுப்ரமணியத்தின் நாட்டியத்தைப் பார்த்து கற்றுக் கொள்ள ஆரம்பித்தவர்கள் உலகெங்கிலும் பலபேர் உண்டு.

நான் திருமதி . சித்ரா விஸ்வேஸ்வரனின் மாணவன். ஆயினும் என் அரங்கேற்ற அழைப்பிதழை (1993) அவருக்கு கொடுக்கச் சென்ற போது அன்புடன் வீட்டிற்குள் இருந்த பூஜையறைக்கு அழைத்துச்சென்று என் சதங்கைகளை வாங்கி தன் கால்களில் அணிந்து "நான் பத்மினி அவர்களின் சதங்கைகளை அணிந்து அரங்கேற்றம் செய்தேன் . நீ நான் அணிந்த சதங்கைகளை அணிந்து ஆடு" என்று ஆசிர்வதித்து, என் அரங்கேற்ற நிகழ்விலும் சாதாரண பார்வையாளராக கலந்து கொண்டார். அன்று தன் நாட்டியப்பள்ளியின் அறிவிப்புப் பலகையில் எல்லோரும் என் அரங்கேற்றத்திற்கு செல்ல வேண்டும் என அன்புக் கட்டளையும் இட்டார். அன்றுமுதல் இன்றுவரை அவர் என்னை இஸ்லாமியன் என்ற எண்ணத்தோடு பேசியதேயில்லை .. என்னை மட்டுமல்ல, யாரையுமே.

ஒருமுறை மறைந்த அப்துஸ்ஸமது அவர்களோடு ஒரு நிகழ்வில் கலந்து கொண்டு தன் குடும்பம் எப்படியெல்லாம் வருடாவருடம் நாகூர் ஆண்டவருக்கு காணிக்கை செலுத்துகிறது என்பதை விவரித்தார். அப்போது ஸமத் அவர்கள் தனக்கு நாட்டியத்தைப்பற்றி சில புத்தகங்கள் தேவை என்று கேட்டிருக்கிறார். விடியும் முன்பே புத்தக்கங்களுடன் வாசலில் பத்மா சுப்ரமண்யம் அவர்கள். இந்நிகழ்வினை ஸமத் அவர்கள் ஆனந்தவிகடனில் பகிர்ந்துக் கொண்டுள்ளார்.

நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் கம்பன் கழக விழாக்களில் விழாவின் இறுதி நாளில் னுச.பத்மா அவர்களின் நாட்டியத்தோடு முடிப்பதை பல முறை கண்டிருக்கிறேன். அவர் வார்தைகளில் "செல்வி பத்மா சுப்ரமணியம் அவர்கள் கம்பனின் இலக்கியச் சுவையை பாமரனுக்கும் சொல்லும் வகையை கம்பன் கண்டிருந்தால் பாடல்களுக்கு உரை எழுத வேண்டிய அவசியமிராது என்றே முடிவு செய்திருப்பான்". அப்பேர்ப்பட்ட பெருங்கலைஞர் அவர். பலமுறை நீதியரசரை நாடி கம்பனின் பாடல்களுக்கு அபிநயம் பிடிப்பது பற்றி தன் அண்ணியார் திருமதி. ஷ்யாமளா பாலகிருஷ்ணனுடன் விளக்கம் பெற்றிருக்கிறார். நீதியரசர் என்னுடன் பல நினைவுகளைப் பகிர்ந்த போது இதனையும் குறிப்பிட்டிருக்கிறார். என் அரங்கேற்றத்தில் நீதியரசரும் பிரதம விருந்தினராக கலந்துக் கொண்டார்.

நான் ஏன் இந்த மூன்று நிகழ்வுகளை விவரிக்கின்றேன் என்றால் .. பத்மா அக்கா அவர்களுக்கு ஒருபோதும் வர்ணத்வேஷமோ, ஜாதித்வஷமோ இருந்ததில்லை .. நாட்டிய நிகழ்விற்கு சென்றால் எல்லோருக்கும் என்ன உணவோ, எப்படி சாப்பிடுகிறார்களோ அப்படித்தான் அவரும் சாப்பிடுவார்.

அவரின் நாட்டியப் பள்ளியில் இலவசமாக ஏழை மாணவர்களுக்கு ஜாதி, வர்ண பேதமின்றி நாட்டியம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் அவர்களில் பலபேரை நான் நன்கறிவேன்.

சென்ற வருடம் வகுளாபரணம் என்ற நாட்டிய நிகழ்வை நடத்தினேன் . இரு பெரும் கலைஞர்களுக்கு விருதளித்த (இருவரும் ப்ராமணரல்ல)அந்நிகழ்வில் முதல் ஆளாக வந்து கலந்து கொண்டார் .அப்போது, என் பாடகர்க்கு மாரடைப்பு வந்தவுடன் நிகழ்ச்சியை இடை நிறுத்தி அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் (அவர் ப்ராமணர் இல்லை) அப்பாடகரைப் பற்றி ஒவ்வொரு நாளும் அக்கரையுடன் விசாரித்தார். முழுதும் குணமாகி விட்டார் என்பதறிந்து அவ்வளவு சந்தோஷம்.

இன்று நான், கவிதாராமு, நர்த்தகி நட்ராஜ், பார்வதி ரவி, கோபிகா வர்மா என பிராமணரல்லாத எங்களின் நடன நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்து உடல் நலத்தையும் (வயது 77) பொருட்படுத்தாது கடைசிவரை இருந்து தக்க ஆலோசனைகளை வழங்கிவிட்டுத்தான் செல்வார். மறைந்த முதல்வர்கள் எம்ஜியார், ஜானகி அம்மையார், கலைஞர், ஜெயலலிதா என அவரின் ரசிகர் கூட்டம் மிகப்பெரிது. திருமதி இந்திரா காந்தி, ராஜிவ்காந்தி, நரசிம்மராவ், வாஜ்பாய், மோதி என பல தேசியத் தலைவர்கள் இவரின் நாட்டியத்தில் தன்னை இழந்திருக்கிறார்கள். வட இந்தியா Briju Maharaj, Kelucharan Mahapatra போன்ற நாட்டிய மேதைகளால் பெருமை கொண்டது. தென்னத்திற்கு ஒரே ஒருவர்தாம், அவர் Dr. Padma Subramanyam. இது மிகைக் கூற்றல்ல.

பத்மா அக்கா அவர்களின் சமீபத்திய அந்த காணொளி யாரையும் புண்படுத்தும் நோக்கம் இருப்பதாக தெரியவில்லை. அவரின் வாழ்க்கையை அப்படி அமைத்துக் கொள்ளவும் இல்லை. தன் இன உயர்வை வெளிப்படுத்துவது அவரின் தனியுரிமை. அவ்வுணர்வால் யாரேனும் பாதிக்கப் பட்டிருந்தால் அது சமுதாய பார்வையில் தவறு. அவ்வாறு நிகழ வாய்ப்பேயில்லை.

இந்தக் கணிணி யுகத்தில் யார் என்ன வேண்டுமானாலும் பேசலாம். சொல்லலாம். கருத்துச் சுதந்திரம் என்பது எல்லோருக்கும் உண்டு . நான் சொல்லி எவரும் கேட்கப்போவதில்லை. ஆயினும் உயர்ந்த கலையுள்ளமும், அன்பு நிறைந்த சகோதரியையும் தரம் குறைந்த வார்த்தைகளால் தாக்கப்படும் போது அவரின் கலையுலக அர்ப்பணிப்பை எடுத்துச் சொல்வது என் போன்ற கலைஞர்களின் கடமை.

**சென்னையிலிருந்து: பரதநாட்டியக் கலைஞர் "கலைமாமணி" சாகிர் உசைன்**
28-04-2020

---

பயணத் தொடர்... பகுதி-26

# பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்

**(முனைவர் வே. சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு)**

நயாகரா சென்று வந்த களைப்பில் மறுநாள் அக்டோபர் ஆறாம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சற்று தாமதமாகவே கண் விழித்தேன். அன்று பிற்பகலில் ஒரு முக்கிய நிகழ்வு. கனடாவின் ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் நான் உரை நிகழ்த்தவேண்டும். ஏற்கனவே நான் உரை நிகழ்த்தியிருந்த ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அன்பு வேண்டுகோளின்படி அந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கனடாவின் ஸ்காபுறோ நகரில்இயங்கிவரும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்




கல்லூரியில் வார இறுதி நாட்களில் தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் மாணவ மாணவியருக்கு கற்பித்து வருகிறார்கள். உலகம் முழுவதும் நம் சைவ கோவில்கள் இன்று இருக்கின்றன. கோவில்கள் இல்லாத நாடே இல்லை எனலாம் என்னும் அளவிற்கு நம் கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. இது எவ்வாறு சாத்தியமாயிற்று ? இவற்றில் பெரும்பான்மையான கோவில்கள் இலங்கைத் தமிழர்களால் உருவாக்கப்பட்டது. இவ்வுலகில் முதன்முதலில் இறைவனைப் பற்றிய சிந்தனை செய்து, அவனருளாலே அவனைத் துதித்து, அவனை அறிந்து, இந்த உலகம் முழுவதும் மக்களுக்கு அறிய வைத்தது சைவ சமயமே. சைவ சமயம் பன்நெடுங்காலம் உலகம் முழுவதும் இருந்தது. இன்று பல்வேறு நாடுகளின் பூமிக்கடியில் இருந்து சிவலிங்கமும் சிவன் கோவிலும் வெளிவருவதே நம் கண் முன்னர் நிற்கும் வாழும் சான்றுகள். பின்னர் பல அரசியல் காரணமாக சில பகுதிகளில் வெவ்வேறு மதங்கள் நிறுவப்பட்டன. ஆனால், கடந்த சில நூறாண்டுகளில், மீண்டும் சைவ கோவில்கள் உலகெங்கும் புதுமையாக நிறுவப்பட்டு வருவதையே நாம் பார்க்கிறோம். இலங்கையிலிருந்து உலகெங்கும் புலம்பெயர்ந்த தமிழர்களால் இது சாத்தியமாயிற்று.

ஒரு காலத்தில் பாடசாலைகளில் சமயக்கல்வி கொடுக்கப்பட்டது. சமயமும் படிப்பும் ஒன்றாக பிணைந்திருந்தது. சைவம் என்பது ஒரு பாடமாகவே பாடசாலைகளில் இருந்தது. சைவத்தை பற்றி அடிப்படை தெரியாமல் ஒரு மாணவர் கூட வெளியில் வருவது இல்லை. ஞாயிற்றுக்கிழமை தோறும் சமய வகுப்பு கட்டாயமாக அனைவருக்கும் நடத்தப்பட்டது. மேலும் பஞ்ச புராண பாடல்கள் தினமும் கடவுள் வாழ்த்தாக பாடப்பட்ட பின்பு தான் வகுப்புகள் துவங்கும். பஞ்ச புராணம் தெரியாமல் மாணவர்கள் பாடசாலையை விட்டே வெளியே வரமாட்டார்கள். அது மட்டுமல்லாது, பாடசாலையின் வளாகத்தின் உள்ளேயே ஒரு பிள்ளையார் கோவிலோ, சிவன் கோவிலோ இருக்கும். அங்கு வெள்ளிகிழமை தோறும் காலையில்



சுவாமிக்கு அபிடேகம் நடக்கும். பின்னர் ஒரு 15 நிமிடம் சமயச் சொற்பொழிவு நடக்கும். நம் சமய செய்திகள் மாணவர்களுக்கு சொல்லித் தரப்படும். பின்னர் சுவாமிக்கு அலங்காரம், தீபாராதனை நடக்கும். இது அனைத்து பாடசாலைகளிலும் கட்டாயமாக இருந்தது. இவ்வாறு வலுவாக நம் சமய கல்வி அனைவருக்கும் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்று இலங்கையில் மட்டுமே சமயக்கல்வியும், அறநெறிப் பாடசாலைகளும் வலுவாக இருந்து வருகின்றன.

இலங்கைத் தமிழர்கள் நம் சைவ சமயத்தில் மிகவும் பிடிப்பாக, அழுத்தமாக இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கும் ஏழரைக் கோடித் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் என்ன வித்தியாசம் ? சமயக்கல்வி ஒன்றே பெரும் வித்தியாசம். இந்த சமயக்கல்வியே இலங்கைத் தமிழர்களை நம் சமயமும், மொழியும், கலாசாரமும் உலகெங்கும் பரவ உதவி செய்தது என்றால் அது மிகையில்லை. இலங்கையில் பௌத்த அரசு இருப்பினும் தமிழர்களுக்கு தமிழ்ச் சமயப் பாடங்களே நடத்தப்படுகின்றன. தமிழ்ப் பாடசாலைகளில் சைவப் பாடம் கற்பிக்கப்படுகிறது. சமயகல்வி பெற்ற எவரையும் மதம் மாற்ற இயலாது. நம் சமயத்தின் அடிப்படை தத்துவங்களை அறிந்தவர் எவரும் மதம் மாற மாட்டார்கள்.

கல்வியின் முக்கியத்துவத்தை வள்ளுவர் "கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டுபுண்ணுடையர் கல்லா தவர்" என்று வலியுறுத்துகின்றார். கல்வி கற்காதவர் கண்ணில்லாத குருடர் என்றே சாடுகிறார் வள்ளுவர். கல்வி ஒருவருக்கு அவ்வளவு அவசியமானது. அந்த கல்வியின் அவசியத்தை நீங்கள் உணர வேண்டுமாயின், ஒரு நாள் இந்த பரிசோதனை செய்து பாருங்கள். உங்கள் கண்களை நல்ல துணியைக் கொண்டு இறுக கட்டிக் கொண்டு ஒரே ஒரு நாள் முழுவதும் வாழ்ந்து பாருங்கள். நிஜமாகவே முயற்சி செய்து பாருங்கள். அப்போது தான் உங்கள் கண்களின் அருமை உங்களுக்குத் தெரியும். கல்வி இல்லாதவனுடைய வாழ்வும் குருடனின் வாழ்கை போலவே இருக்கும். கல்வி இல்லாதவன் கண் இல்லாதவன். சமயகல்வி இல்லாதவன் உயிரே இல்லாதவன். "சமயகல்வி இல்லாதவன் தன் பிறப்பின் உண்மையையும் நோக்கத்தையும் அறியாதவனாகிறான்"


ஒருமணிநேரம் தாண்டியும் எனது உரையை ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவ மாணவிகள் ரசித்தனர். சைவத்தையும் தமிழையும் ஆர்வமாகக் கற்கும் கனடா குழந்தைகளுக்கு எனது உரை மிக்க மகிழ்வைத் தந்தது. மாணவ மாணவிகளுக்கு மாத்திரமல்ல,அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் பயனுள்ள ஒரு உரையாக விளங்கியது என்னுடைய அன்றைய பேச்சு என்று நிகழ்ச்சிக்குப் பின்னர், திரும்பும் வழியில், நண்பர் லோகேந்திரலிங்கம் என்னிடம் தெரிவித்தார். *(வளரும்)*

# 35ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். சத்தியமூர்த்தி சத்தியசீலன்

(ஐயனார் கோவிலடி – சுருவில்)

(கொழும்பு ஸ்ரீ திருப்பதி ஏஜன்சி)



திதி: 06-05-2020

இன்றிலிருந்து முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னால் ஒரு சித்திரா பௌர்ணமி நாளில்
உன் இதயத்தை துளைத்துச் சென்ற அந்த சிங்களச் சிப்பாயின் சன்னங்கள்
இன்னும் இன்னும் எத்தனையோ ஆயிரம் உயிர்களை குடித்துக் கொண்டே இருக்கின்றன
ஆமாம் சகோதரனே, வற்றாத நிலாவரை ஊற்றைப் போல நம் அயல் நாட்டு அரசுகள்
ஆயுதங்களை அள்ளி அள்ளி இறைப்பதால் சிங்களச் சிப்பாயிகளின் துப்பாக்கிகள்
இன்னும் சீறிக்கொண்டு இருக்கின்றன
இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் உன் சிதைத்த நெஞ்சிலிருந்து
சிந்திய குருதியின் கோரமும் முனகியபடி அடங்கிய உன் குரலும்
இன்னும் எங்களுக்கு கேட்டும் ஒலியாக சேர்ந்தே வருகின்றன...

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

மலர்வு: 25-12-1957

உதிர்வு: 05-05-1985

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 06 - 1937



மறைவு
28 - 04 - 2020

## வே.ச. விசுவலிங்கம் சபாநாதன் ஜே.பி.

(ஓய்வுபெற்ற காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், நயினையூர் இந்து கலாசார அபிலிருத்திச் சபை, செயலர். முன்னாள் நயினை மீனாட்சி அம்மன் ஆலய தவிசாளர். நயினை நாகபூஷணி ஆலய அறங்காவலர் சபைப் பொருளாளர்)

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட **வே. ச. விசுவலிங்கம் சபாநாதன்** நேற்று (28. 04. 2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான வே.ச. விசுவலிங்கம் - நாகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - கண்மணி தம்பதியினரின் மருமகனும், ஓய்வுபெற்ற அதிபர் தவமணியின் அன்புக் கணவரும், திருமதி பாமதி - சத்தியேஸ்வரனின் பாசமிகு பெரிய தந்தையுமாவார். காலஞ்சென்றவர்களான யோகநாதன், வேதநாதன், புண்ணியநாதன், மற்றும் மகேஸ்வரநாதன், மீனாட்சி ஆகியோரின் ஆசை சகோதரரும், பிரசாந்த், சாம்பவி, விநோத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29. 04. 2020) புதன்கிழமை முற்பகல் 9:30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது. தகனக் கிரியைகள் யாழ். கோம்பையன்மணல் இந்து மயானத்தில் இடம்பெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நயினை இந்து கலாசார அபிவிருத்திச் சபை.

MEGA Financial Group
Ruban Lingam
Insurance Agent
Call:647-928-5626
PH28 - 4168 Finch Ave, East
Scarborough, ON M1S 5H6
Web: www.rubanlingam.com
Email: rubanlingam@hotmail.com

தமிழ் பேசும் இளம் சட்டத்தரணியான அரவிந் ஜெகதீசன் அவர்களை அழைப்பதன் மூலம் உங்கள் வழக்குகள், தொழில் சம்பந்தமான பிரச்சனைகள், வீட்டு உரிமையாளர்கள் - குடியிருப்பாளருக்கு இடையிலான வழக்குகள் ஆகியவை தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
437.229.9643
- Employment Law
- Severance Packages
- Landlord and Tenant Law
- Wrongful Dismissal
- Human Rights
- Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
email: aro@aravinthlaw.ca www.aravinthlaw.ca
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3CJ

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA 1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில் UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1256 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 1, 2020

# கிறிஸ்,இத்தாலி நாடுகளுக்கிடையில் உள்ள கடற்பகுதியில், கனடிய படைவீரர்கள் சென்ற ஹெலிகெப்டர் விபத்துக்குள்ளாகியது

கிறிஸ் மற்றும் இத்தாலி நாடுகளுக்கிடையில் உள்ள கடற்பகுதிக்கு மேலாக கனடிய படைவீரர்கள் பணிகள் நிமித்தம் பயணம் செய்த ஹெலிகெப்டர் விபத்துக்குள்ளாகியதில் ஒருவரின் உடல் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் ஏனைய ஐந்து படைவீரர்கள் தொடர்பான தகவல் எதுவும் கிடைக்கவில்லையென கனடிய இராணுவத்தின் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்படி ஹெலிகெப்டர் விபத்து தொடர்பாக நேற்று வியாழக்கிழமை காலை உறுதி செய்த கனடியப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் படைகளின் தலைமை அதிகாரி ஆகியோர், விபத்தில் சம்பந்தப்பட்ட ஆறு படை வீரர்களின் குடும்பத்தினருக்கு தமது ஆறுதலையும் கவலையை தெரிவிப்பதாக ஒட்டாவா மாநகரில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான இணைய வழி சந்திப்பின் போது தெரிவித்தார்கள்.

யேவுழு என்று அழைக்கபபடும் வட அட்லான்டிக் உடன்படிக்கை சார்ந்த அமைப்பின் ஏற்பாட்டின் படி கடற்பகுதி பாதுகாப்பு தொடர்பான பணிகளில் வான் பரப்புக்களில் ஈடுபட்டு விட்டு கடலில் நங்கூரமிட்டுள்ள தமது கப்பலை நோக்கி திரும்புகையிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் கடலில் வீழ்ந்த இந்த ஹெலிகெப்டர் விபத்துக்குள்ளான பகுதியில் தேடுதல் நடத்தியபோது ஒருவரின் உடல் கிடைத்ததாகவும், ஏனைய ஐந்து படை வீரர்களின் உடல்களோ அல்லது அவர்கள் பற்றிய ஏனைய தடையங்களோ இந்த செய்தி எழுதப்படுகின்ற நேரத்தில் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கபபடுகின்றது.

இந்த ஆறு கனடிய படை வீர, வீராங்கனைகளில் நால்வர் கனடிய விமானப்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் ஏனைய இருவரும் கனடிய றோயல் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குரிய வெளிநாட்டுப் பணியானது,கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஆற மாத காலத்திற்கு எற்பாடு செய்யப்படடிருந்ததாகவும் ஆனால் எதிர்பாராத விதமான பணிக்குரிய காலத்திற்கு இடையில் அவர்கள் அறுவரும் இந்த பயங்கரமான விபத்தைச் சந்தித்துள்ளார்கள் என்றும் இது தொடர்பாக கனடிய மக்கள் அனைவரும் மிகவும் துணிச்சல் மிகுந்த அவர்களது கடமை உணர்வை பாராட்டும் அதேவேளை அவர்களின் குடும்பத்திற்காக கண்ணீர் வடிபபார்கள் என்றும் கனடிய பிரதமர இன்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுககு பதிலளித்த போது தெரிவித்தார்.

மேற்படி ஹெலிகெப்டர் விபத்தில் சிக்கிய படைவீரர்களின் ஏனைய விபரங்கள் பினவருமாறு:-

இந்த படை வீரர்களில், ரொரென்ரோ பகுதியை சொந்த இடமாகக் கொண்ட Nova Scotia Sub-Lt. Abbigail Cowbrough. a maritime systems engineering officer என்பவரின் உடலே கண்டு பிடிக்கபபட்டுள்ளது.



இதுவரை கண்டு பிடிக்கப்படாத ஐந்து படைவீரர்களின் விபரங்கள் பின்வருமாறு:-

Capt. Brenden MacDonald. -இவர், Nova Scotia. மாகாணத்தைச் சேர்நதவர்

Capt. Kevin Hagen. ஒரு விமானி , British Columbia. மாகாணத்தைச் சேர்ந்தவர்

Capt. Maxime Miron-Morin. ஒரு விமானப் படை திட்ட அதிகாரி -கியுபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்,

Sub-Lt. Matthew Pyke, - ஒரு கடற்படையின் ஆயுதங்களுக்கு பொறுப்பான அதிகாரி -நோவோ ஸ்கோசியா மாகாணத்தைச் சேர்ந்தவர்.,

Master Cpl. Matthew Cousins, -ஒரு விமானப் படையின் மின்னியல் மற்றும் சிக்னல்ஸ் தொடர்பான பிரிவின் அதிகாரி ஆவார். ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த கல்ப் நகரத்தைச் சேர்ந்தவர்.

கனடிய மக்கள் “கொரோனா“ நோயின் தாக்கத்தினால் பல்வேறு மனக்கஸ்டங்கள் மற்றும் இழப்புக்களை தாங்கியவண்ணம் இருக்கையில இந்த ஹெலிகெப்டர் விபத்தானது எமக்கு மேலும் துன்பத்தை தருகின்றது என்றும் கனடிய பிரதமர் இன்று காலை தெரிவித்தார்.

# York Regional Police Chief Eric Jolliffe, departs from his Position from May 1st, 2020



## யோர்க் பிராந்திய காவல்துறையின் தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றிய எரிக் ஜொலிவ் இன்று பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்

கனடாவின் யோர்க் பிராந்திய காவல்துறையின் தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றிய பெருமதிப்பிற்குரிய எரிக் ஜொலிவ் அவர்கள் வருகின்ற மே மாதம் 1ம் திகதியிலிருந்து தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். இவரது சேவைக் காலத்தில் இந்த பிராந்தியத்தில் வாழும் பல்லின மக்களோடும் அனைத்து மதப்பிரிவினரோடும் நெருக்கமான உறவைப் பேணி தனது கடமைகளை மிகுந்த பொறுப்புணர்வோடு மேற்கொண்டார் என்பது நாம் நேரடியாக கண்ட உண்மை.

அனைத்து இனங்கள் சார்ந்த, பண்பாடு தொடர்பான மற்றும் கலை சார்ந்த நிகழ்வுகளில் தவறாமல் கலந்து கொள்ளும் பண்பைக் கடைபபிடித்த எரிக் ஜொலிவ் அவர்கள், எமது தமிழ் மக்கள் சார்ந்த விழாக்கள் பலவற்றிலும் சிரித்த முகத்தோடு கலந்து கொண்டமை எமக்கு மறக்க முடியாத அனுபவங்கள் ஆகும். கடந்த ஆறு ஆண்டுகளாக எமது உதயன் சர்வதேச விருது விழாக்களையும் வருடந்தோறும் தனது சக உத்தியோகத்தர்களோடு வருகை தந்து சபையை அலங்கரித்த எரிக் ஜொலிவ் அவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது உதயன் விருது விழா தெரிவிக்குழு, “பல்லின நட்புறவைப் பேணியதற்கான உயர் விருது“ - Inter-Communal Relationship Award- என்னும் விருதினை வழங்கிக் கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. பல்லாண்டு காலம் இன்னும் வாழ்ந்து பணிசெய்வீர், செயல் வீரர், எரிக் ஜொலிவ் அவர்களே!!!

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.

RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074